முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1522

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.11.2023,** புதன்கிழமை

1. சரவணச் சுடரேற்றி இந்த கலியினில்
சகலருக்கும் ஞானம் அருளும் வண்ணம்
அறமோடு தர்ம நெறிகாட்டும்
அரங்கனே ஆறுமுக ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 13 ம் நாள், 29.11.2023, புதன்கிழமை)
ஞாலமதில் சோபகிருது தேள் திங்கள் வரமென அரங்கனுக்கு
சக்தி கூட வல்லமைபட இனிதே எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கன் தவதர்ம பலம் உலகை மாற்றுவது உறுதியப்பா
குறைவில்லா அரங்கன் தர்மபலம் குவலயத்தில் வறுமை போக்குவது உறுதியப்பா
அப்பனே அரங்கன் சீடர்களென
அகிலத்தில் அடையாளம் கொண்டவர்கள்தான்
4. தப்பாமல் அரங்கன் அவதார நோக்கத்தை
தரணி எங்கும் தர்மநெறிக் கொள்கையாக மாற்றி
மாற்றியே உலகமாற்றத்தை
மகான் அரங்கன் அவதாரத்தின் நோக்கமாக பூர்த்திசெய்ய நேரும்
5. நேர்மைகொண்டு அரங்கன் வழி வரும்
நிலவுலக மக்கள் அனைவருக்கும்
கர்மவினையை வெல்வதோடு
கடைத்தேற உண்டான உபாயமும் உறுதியாகக் கிட்டும்
6. கிட்டவே ஓங்காரக்குடில் நோக்கி
குறையில்லா தொடர்பும் தொண்டும்
இட்டமுடன் உலகோர் செய்துகொண்டால்
இந்த உலகம் சடுதி ஞானலோகமாற்றம் காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–